Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.60/2018

**Depositions of PW- 9**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.இளங்கோ | Occupation | |
| Father's name | பெரியசாமி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 01st day of June 2026.

01.06.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது செங்கல்பட்டு வட்டார போக்குவரத்து அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.07.2016 அன்று நான் திருவில்லிபுத்தூர் வட்டார போக்குரவத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை–1 ஆக பணிபுரிந்தபோது திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய வேண்டுகோள் படி வழக்கு எண்.535/2016 வழக்கில் சம்மந்தப்பட்ட முதல் வாகனமான TN 46 M 3180 என்ற பதிவெண் கொண்ட Ashok Leyland கனரக சரக்கு வாகனத்தை அதே நாளில் மதியம் சுமார் 12.30 மணியளவில் எனது அலுவலகம் முன்பு வைத்து ஆய்வு செய்தேன். மேற்படி விபத்தால் வாகனத்திற்கு கீழ்க்கண்ட சேதம் காணப்பட்டது

1) முன் வலதுபுற பம்பர் வளைந்திருந்தது. மேற்படி வாகனத்தின் கால்தடை திறன் 70 சதவீதமும் கைத்தடை இயங்கும் நிலையில் இருந்தது. சுக்கான் மற்றும் உருளைகள் திருப்திகரமாக இருந்தது. மேலும் மேற்படி விபத்தானது மேற்படி வாகனத்தின் எந்த வித இயந்திரகோளாறினாலும் ஏற்படவில்லை என்று சான்று வழங்கினேன். **TN 46 M 3180 என்ற பதிவெண் கொண்ட Ashok Leyland கனரக சரக்கு வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இதே வழக்கில் சம்மந்தப்பட்ட மற்றொரு வாகனமான TN 84 6122 என்ற பதிவெண் கொண்ட Hero splendor Pro என்ற

இருசக்கர வாகனத்தை 01.08.2016 ம் தேதி அன்று மதியம் சுமார் 12.50 மணியளவில் எங்கள் அலுவலகம் முன்பு வைத்து ஆய்வு செய்தேன். மேற்படி விபத்தால் மேற்படி வாகனத்தில் கீழ்க்கண்ட சேதங்கள் காணப்பட்டன.

1) Fork Assembly, Rear Right Indicator, Front left foot rest, Head light Assembly and Handle bar damaged.

மேற்படி விபத்தால் ஏற்பட்ட சேதங்களால் மேற்படி வாகனம் ஓட்டி பார்க்க இயலாத நிலையில்இருந்தது. வாகனத்தை நின்ற நிலையில் ஆய்வு செய்ததில் வாகனத்தின் தடைகள், Handle bar மற்றும் உருளைகள் திருப்திகரமாக இருந்தது. மேலும் மேற்படி விபத்தானது மேற்படி வாகனத்தின் எந்த வித இயந்திரகோளாறினாலும் ஏற்படவில்லை என்று சான்று வழங்கினேன். **TN 84 6122 என்ற பதிவெண் கொண்ட Hero splendor Pro என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

45 டிகிரி வளைவில் இரண்டாவது கியரில் வண்டி சென்றுகொண்டிருக்கும்போது எதிரே வருபவருக்காக பிரேக் போடும்போது சுமார் எவ்வளவு தூரத்தில் சென்று வண்டி நிற்கும் என்பதை தெரிவிக்கமுடியுமா என்றால் சுமார் 3 முதல் 4 அடி சென்று தான் வாகனம் நிற்கும். வண்டி 30 கிலோமீட்டர் வேகத்தில் சென்றுகொண்டிருக்கம்போது எதிரே இருசக்கர வாகனம் 60 கிலோமீட்டர் வேகத்தில் வந்து லாரியில் மோதினால் அந்த இருசக்கர வாகனம் எந்த இடத்தில் விபத்துக்குள்ளாகி நிற்கும் என்றால் விபத்து நடந்த இடத்தின் தன்மையை பொருத்தும் வாகனத்தின் வேகத்தை வைத்தும் தான் கூய இயலும். இருசக்கர வாகனத்திற்காக நான் கொடுத்த மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் இருசக்கர வாகனத்தில் மட்டுமே சேதம் அதிகமாக அடைந்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அதனால் இருசக்கர வாகனம் ஓட்டிவந்த நபர்தான் அதிவேகமாக ஓட்டிவந்திருப்பார் என்றாலும் சம்பவயிடத்தில் ஆய்வு செய்திருந்தால் தான் மேற்படி சங்கதிகள் பற்றி கூற இயலும் இவ்வழக்கில் மேற்படி வாகனங்களை அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்ததால் மேற்படி சங்கதிகள் பற்றி கூற இயலாது.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.